# தி கே.சி.பி. லிமிடெட்

CIN: L65991TN1941PLC001128
பதிவு அலுவலகம் : "ராமகிருஷ்ணா பில்டிங்ஸ்" 2, டாக்டர் பி.வி.செரியன் க்ரசண்ட், எழும்பூர், சென்னை 600 008. தொ.பே.: 66772600
ஃபேக்ஸ் : 66772620
www.kcp.co.in ஈ–மெயில் : investor@kcp.co.in

## பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் மாற்றியமைக்கப்பட்ட விதி 22 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 110–ன் படியும் செபி அமைப்பின் (கட்டுப்பாடுகள் மற்றும் தெரிவித்தல் தேவைகள் பட்டியலிடுதல்) நெறிமுறைகள் 2015–ன் நெறிமுறை 44–ன் படியும் நிறுவனமானது பின்வரும் பணியை மேற்கொண்டுள்ளது என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. அதாவது –

1. நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர்கள் இடம் பெற்றுள்ள அல்லது ஏப்ரல் 27, 2018 வெள்ளிக்கிழமை வரையாக, வைப்பீட்டாளர்களால் பராமரிக்கப்படும் பயன் அடையும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர்கள் இடம் பெற்றுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும், திரு. ரவி சித்தூரி அவர்களை தலைமை செயல் அதிகாரி (Chief Operating Officer) ஆக (அலுவலகத்திற்கு அல்லது இலாபத்தின் இடத்திற்கு) நியமனம் செய்ய உறுப்பினர்களின் சம்மதத்தை கோரும் தீர்மானம் தொடர்பான தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பினை தபால் வாக்குச்சீட்டு படிவம் மற்றும் சுயமுகவரியிட்ட பதில் உறையுடன் கூடியதாக (தபால் கட்டணம் செலுத்தப்பட்டது) அனுமதிக்கப்பட்ட வழிமுறையில் அனுப்பி வைக்கும் பணியை நிறுவனமானது, மே 3, 2018 வியாழக்கிழமை அன்று நிறைவு செய்துள்ளது.

   அந்த தேதியில் உறுப்பினராக இல்லாத நபர்கள், தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பினை தகவலாக மட்டுமே கருத வேண்டும்.

2. அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வாக்குப் பதிவு (e-voting) வசதி வழங்குவதற்காக, நிறுவனமானது, NSDL-ன் சேவைகளைப் பெற்றுள்ளது. தபால் மூலமாகவும் மின்னணு முறையிலும் வாக்களித்தல், மே 3, 2018 வியாழக்கிழமை அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு துவங்கும்; ஜூன் 2, 2018 சனிக்கிழமை அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு முடிவடையும்.

3. அறிவிப்பு மற்றும் தபால் வாக்குச்சீட்டு படிவங்கள், நிறுவனத்தின் இணையதளத்தில் உள்ளன; தபால் வாக்குச்சீட்டு கிடைக்கப்பெறாத பங்குதாரர்கள், நிறுவனத்தின் **www.kcp.co.in** இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தபால் வாக்குச்சீட்டு படிவத்தின் டூப்ளிகேட் நகலுக்காக தங்கள் கோரிக்கையை **vijaycs@kcp.co.in** மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

4. தபால் வாக்குச்சீட்டு நடைமுறையை/மின்னணு வாக்குப் பதிவு நடைமுறையை நடத்தும் நெறியாளராக இயக்குநர்கள் குழு, நிறுவன செயலராகப் பணியாற்றி வரும் திரு. R. பாலசுப்பிரமணியம் (FCS:2397) அவர்களை நியமித்துள்ளார்கள்.

5. உறுப்பினர்கள், தங்களுடைய தபால் வாக்குச்சீட்டு படிவத்தை பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்டதாக ஜூன் 2, 2018 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்குள் நெறியாளர் வசம் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். குறிப்பிட்ட கெடுத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் அனைத்து தபால் வாக்குச்சீட்டு படிவங்களும் அப்படிப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து பதில்கள் பெறப்படாதவை என்றே கருதப்பட்டு, ஜூன் 6, 2018 புதன்கிழமை அன்று அல்லது அதற்கு முன்பாக, முடிவுகள் அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட முடிவுகள், நெறியாளரின் அறிக்கையுடன் நிறுவனத்தின் இணையதளம் **www.kcp.co.in**-ல் பதிவேற்றப்படும்; அது குறித்து அதே நாளில் பங்குச்சந்தைகளுக்குத் தெரிவிக்கப்படும்.

6. இது குறித்து ஏதேனும் விசாரணைக்கு **https://www.evoting.nsdl.com** தளத்தில் உள்ள ''டவுன்லோட்ஸ்'' பிரிவில் பங்குதாரர்களின் மின்னணு வாக்குப் பதிவு கையேட்டில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) என்பதைப் பார்க்கவும். NSDL தொடர்புக்கு இமெயில்: **evoting@nsdl.co.in** அல்லது 1800 222 990 என்ற டோல்ஃப்ரீ எண்ணை அணுகவும்.

**தி கே.சி.பி. லிமிடெட்டுக்காக**
**கவிதா D. சித்தூரி**
இணை மேலாண்மை இயக்குநர்

இடம் : சென்னை
தேதி : 03.05.2018